அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 16/2026

எனது இலக்கம் : EST-3/04/POL/0072
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.07.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2023 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களை சமர்ப்பித்த அரசியல் உரிமைகளுக்கு உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளை செலுத்துதல்**

2023 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலுக்கு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்த, அரசியல் உரிமைகளுக்கு உரித்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்கி வெளியிடப்பட்ட 2025.04.06 ஆம் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2023 மற்றும் 2025.09.26 ஆம் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2025 தொடர்பில் தங்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படைச் சம்பளம் செலுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு, அடிப்படைச் சம்பளம் செலுத்தப்பட்ட காலத்திற்குரிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினையும் செலுத்துவதற்கு 2026.06.15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அவ் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

03. இவ் ஏற்பாடுகள் 2023 மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடாத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்களுக்கு மாத்திரம் உரித்தாகும்.

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு


தொலைபேசி : 0112-692159
தொலைநகல் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ad-3-est@pubad.gov.lk